**செய்தி வெளியீடு எண்: 592** **நாள்: 30.08.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (30.08.2018), சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் விரிவுபடுத்தப்பட்ட கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி, தலைமையுரை ஆற்றிய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்களே, முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.ஜி.வெங்கடாசலம் அவர்களே, திருமதி மனோன்மணி அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே, திரு.காமராஜ் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறியியல் இயக்குநர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினுடைய திட்ட இயக்குநர் அவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அதிகாரிகளே, பல்வேறு துறையைச் சார்ந்த அரசு அலுவலர்களே, முன்னாள் சேர்மேன் திரு.மாதேஷ் அவர்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதனின் வாழ்க்கையில் அத்தியாவசியமான தேவைகள் உணவு, உடை மற்றும் இருப்பிடம். இதைத்தவிர, மனிதன் ஆரோக்கியமாக வாழ இன்றியமையாதது குடிநீர். எடப்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், எடப்பாடி–கொங்கணாபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், கூடுதல் கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தும் பணி, புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதிய அளவு வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தீவிர முன்னுரிமை மற்றும் முக்கியத்துவம் அளிக்கிறது. குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதி முதலீடு பெறப்பட்டு குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு சராசரியாக 93 லிட்டர் என்ற விகிதத்தில் மொத்தம் 1567.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களாலும், அம்மாவினுடைய அரசாலும் செயல்படுத்தப்பட்ட குடிநீர் திட்டங்களால் 2017–2018–ஆம் ஆண்டில் குடிநீர் விநியோகம் 1873.29 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு சராசரியாக 113 லிட்டர் வீதம் வழங்கும் அளவிற்கு 2017–2018–ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். சென்னை நகர் நீங்கலாக, மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சிகளுக்கு குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்த அமைப்பானது, மக்களுக்கு நீடித்து, நிலையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்கத்துடன், மாநிலத்தில் கடலோரப் பகுதியில், குடிநீர் திறன் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீர் தேவை உள்ள பகுதியிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய பொதுவான நீர் ஆதாரம் இருக்கக்கூடிய கூட்டுக்குடிநீர் திட்டங்களை நகரங்கள் மற்றும் ஊரக குடியிருப்புகள் இரண்டும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி, தமிழ்நாட்டில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி வருகிறது. தமிழகத்தில் இதுவரை 554 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலம் 2073 மில்லியன் லிட்டர் குடிநீர் 4 கோடியே 21 லட்சம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரை, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அம்மா அவர்கள், மக்கள் சார்பில் நான் வைத்த அனைத்து கோரிக்கைளையும் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில், இதுவரை 257 கோடியே 21 லட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் குடிநீர்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் சேலம் மாவட்ட எல்லையில் பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, சேலம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 195 ஊரக குடியிருப்புகளுக்கான திட்டப்பணிகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 8 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டவைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் 12 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏறத்தாழ 276 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் பல்வேறு திட்டங்களின் மூலம் 241 கோடியே 92 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் ஏறத்தாழ 39,225 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்தக் கோட்டத்தில், 611 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 637 சாலைப்பணிகள் மற்றும் பாலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடப்பாடி நகரத்தில் பல்வேறு நிதிகளின் கீழ் 55 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 126 பல்வேறு திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த நெடுஞ்சாலைத் துறையில் நபார்டு மற்றும் கிராமச் சாலை சார்பில், நபார்டு திட்டத்தின் கீழ் எடப்பாடி–நெடுங்குளம்–கோனேரிப்பட்டி–ஆனந்தம்பாளையம் வரை 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சாலை உட்பட 2 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 327 ஊரக குடியிருப்புகள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டுக்குடிநீர் திட்டத்தை, 9 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலும் விரிவுபடுத்தப்படும். புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் உட்பட 25 கோடியே 66 லட்சம் மதிப்பீட்டில் 46 புதிய திட்டப் பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்றையதினம் பல்வேறு துறையின் சார்பில் 229 பயனாளிகளுக்கு 1 கோடியே 20 லட்சத்து 9 ஆயிரத்து 900 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளேன்.

தமிழ்நாடு மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மாவின் எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், தமிழ்நாடு அரசு 4466 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 101.67 லட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2 மாநகராட்சிகள், 17 நகராட்சிகள், 41 பேரூராட்சிகள் மற்றும் 14218 கிராம ஊராட்சிகளில் 65 குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், குடிநீர் வழங்கும் பணிகளுக்காக 1853 கோடியே 38 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மக்கள் யாரும் குடிநீருக்கு கஷ்டப்படக்கூடாது என்ற மாண்புமிகு அம்மாவின் உயரிய சிந்தனையின் அடிப்படையில், கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு, மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. கடந்த 85ஆண்டுகளுக்குப் பிறகு, சென்ற ஆண்டு தான் முதல்முறையாக மேட்டூர் அணையில் தூர்வாரப்பட்டது. தமிழ்நாட்டிற்கு கிடைக்கவேண்டிய காவிரி நீரை கொடுக்க மறுத்த கர்நாடக மாநிலத்திற்கு பாடம் புகட்டும் வண்ணமாக, கடவுள் கிருபையால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழையின் காரணமாக பெய்த மழையின் அளவை தாங்க முடியாமல் அவர்களாகவே லட்சக்கணக்கான கன அடி நீரை தமிழ்நாட்டிற்கு திறந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் அனைத்து அணைகள் நிரம்பியுள்ளன. இதன் விளைவாக, தமிழகத்தில் உணவு உற்பத்தி இந்த ஆண்டு உயர வாய்ப்புள்ளது, இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கவேண்டும் என்பதும்தான் அம்மாவின் அரசின் குறிக்கோள் என்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், தமிழ்நாட்டை, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சமீபத்தில், பெங்களூருவைச் சார்ந்த பொது விவகாரங்கள் மையம் என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் ஆளுமையில், இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளது. இது இந்த அரசின் நிர்வாகத் திறமைக்கும், மக்கள் நலத் திட்டத்திற்கும் நல்ல முறையில் செயல்படுத்தும் முறைமைக்கும் வழங்கப்பட்ட

பாராட்டுச் சான்றிதழ் என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு அமைதி, வளம், வளர்ச்சி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பதவி ஏற்றது முதல் இன்று வரை ரூபாய் 22,640 கோடியே 29 இலட்சம் மதிப்பிலான 41,887 முடிந்த பணிகளை துவக்கி வைத்தும், ரூபாய் 19,101 கோடியே 84 இலட்சம் மதிப்பிலான 7,597 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். மொத்தத்தில் இன்று வரை ரூபாய் 41,742 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டிலான 49,484 பணிகள் நடைபெற்று வருகின்றன. மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு நலன் அளிக்கும் திட்டங்களை செயல்படுத்துமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் வந்திருக்கின்றீர்கள். இன்றைக்கு நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல உணவு, உடை, இருக்க இருப்பிடம், குடிக்கக் குடிநீர் இது மிக முக்கியமான ஒன்று. அதை நிறைவேற்றுவது அரசாங்கத்தினுடைய கடமை. அந்த வழியிலே சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் உரிய முறையிலே பணியாற்றி மக்களுக்குத் தேவையான அடிப்படை தேவைகள் முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டும். குடிநீர் மிக, மிக முக்கியமானது. மாவட்டத்திலுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கும், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்குத் தேவையான அளவிற்கு குடிநீர் வழங்க வேண்டும். அதை முறைப்படுத்தி அனைத்து மக்களுக்கும் தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீரை முறையாக வழங்க வேண்டும். அதேபோல, தெரு விளக்குகளைப் பொறுத்தவரைக்கும், அரசு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் நேரடியாக சென்னைக்கு அழைத்து, கிட்டத்தட்ட 12 மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து, மாவட்டங்களில் நடைபெற்ற பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில், குடிநீர் பிரச்சினை, கிராமப்புற சாலைகள், தெரு விளக்குப் பிரச்சினை, பசுமை வீடுகள் எந்தளவிற்கு கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன, கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள், ஆங்காங்கே சுகாதார வளாகங்கள் என்னன

முறையில் பேணிக்காக்கப்படுகின்றது, பட்டா மாறுதல், புதிதாக பட்டா வேண்டி விண்ணப்பிக்கின்றவர்கள் விபரம், புதிதாக வீட்டுமனை வேண்டுமென்று விண்ணப்பிக்கின்றவர்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட விபரம், என்ன நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டிருக்கின்றது, விவசாயிகளுக்கான மகத்தான திட்டமான குடிமராமத்துத் திட்டம் செயல்படும்விதம், என்பனவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அரசுக்கு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையிலே, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல், ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண் முழுமையாக விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும், பொழிகின்ற மழைநீர் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஏரிகள், குளங்களின் மூலமாக சேமிக்கத் தேவையான நடவடிக்கைப்பட வேண்டும், பொழிகின்ற மழைநீரை விவசாயிகள் சரியான முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குத் தேவையான பயிர்களை சாகுபடி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் முழுமையாக விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு காப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திடமும், வேளாண்மைத் துறையை சார்ந்த அதிகாரிகளுக்கும் அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இன்றைக்கு பருவ மழை நல்ல முறையில் பொழிந்துள்ள அணைகள் முழுவதும் நிரம்பியுள்ளதால் இந்த ஆண்டு கூடுதலான விளைச்சல் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, வருகை தந்திருக்கின்ற அதிகாரிகள், தங்களுடைய பகுதியிலே நான் குறிப்பிட்ட வேளாண்மை, உள்ளாட்சி, பொதுப்பணித் துறை, குடிநீர் வடிகால் வாரியத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள் என்பதை தங்கள் மூலமாக அறியவிரும்புகிறேன் என்று தெரிவித்து, இந்த விழாவை சிறப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அவரோடு சேர்ந்து பணியாற்றிய அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**